முருகப்பெருமான் துணை

**மகான் சோமாசிமாற நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.03.2023,**ஞாயிற்றுக்கிழமை

1. தவராஜனே அரங்கா வாழ்க
தருமம் காத்திட அவதரித்த
அவதாரமே வள்ளலே வாழ்க
அண்ணலே உமை வாழ்த்தி இனிதே
2. இனிதே அனுகூல ஆசி
இயம்பிடுவேன் சுபகிருது சால் திங்கள்
கனிவுபட மூவேழுதிகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 21ம் நாள், 05.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
கண்டுரைப்பேன் சோமாசிமாற நாயனாரும்
3. யானுமே உலகநலமுற உரைப்பேன்
உயர்வான அனுகூலம் பெற்று
ஞானபலம் பெற வேண்டின்
ஞாலமதில் அரங்கன் மேலான
4. மேலான நம்பிக்கை திடமாக்கி
முருகா அரங்கா தேசிகா என
முழங்கியே குடிலை நோக்கி
மொழிகுவேன் மக்கள் தொடர்ந்துவர
5. வருகவே வரமாக ஞானம்
வையகத்தில் கிட்ட நேரும்
தருமம் எனும் மகா கவசத்தை
தவராஜன் ஆசிபட ஏற்று
6. ஏற்றுமே தொண்டர்களாக
இணைந்து எல்லாத் திக்கிலும்
ஆற்றல்பட விரிவாகச்செய்து
அன்னதான பலம் பெருகவே
7. பெருகவே உலக மக்களிடை
பெருந்தயவே ஞானமாகியே
முருகப்பெருமானை வணங்கும்
முழுமைபட சரணாகதி உருவாகி
8. ஆகியே உலகம் எங்கிலும்
அருட்தயவு தனி பலமாகி
அகிலத்தில் பசிபிணி இல்லா
ஆபத்து பெருந்துன்பம் அனுகா
9. அனுகா சர்வ பாதுகாப்புமே
அரங்கன் தரும ரூபிலும்
ஞானவடிவிலும் உருவாகி
ஞானவான்களும் மிகுந்து

10. மிகுந்துமே இந்த கலியுகம்
மேலான ஞானயுகமாகும்
தகுந்தபடி ஞான சபையாகி
தரணியில் ஞானவான்கள் தலைமை

11. தலைமை கூடி ஞான ஆட்சி
தரணியெங்கும் அமைந்துமே
வேலவன் ஆளுமை ஆகிடும்
விளம்பிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—